அசல் வழக்குஎண்.195/2021 வா.சா.1 ராஜசேகரன் த/பெ சந்திரநாதன்

**26.02.2024 குறுக்கு விசாரணை**

1. பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டதாக சொல்லும் தேதி 18.07.2015 ஆகும். நான் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தது வட்டிக்காக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ஒரேநாளில் ஒரே இடத்தில் தான் பணம் கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்வது இது தான் முதல் முறையா அல்லது இதற்கு முன்பு பிரதிவாதிக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் கடன் கொடுத்துள்ளேன். அந்த கடன்களுக்கு வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்னேனா என்றால் இல்லை. அந்த கடன்களை பிரதிவாதி திரும்ப செலுத்திவிட்டார்.

2.நான் பிரதிவாதியை தவிர்த்து வேறு யாருக்காவது கடன் கொடுத்துள்ளேனா என்றும் அதற்காக வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியிடமிருந்து கடனுறுதிச்சீட்டு மட்டும்தான் வாங்கினேன் பத்திரம் எதுவும் வாங்கவில்லை. பிரதிவாதி கடனுறுதிச்சீட்டை தயாராக எழுதி எடுத்து வந்தார் என்றும் நான் அதில் எதுவும் எழுதவில்லை என்று சொல்கிறேனா என்றால் சரிதான்.

3. 2015ம் ஆண்டில் பிரதிவாதி வாங்கிய கடனை திரும்ப கொடுக்காததால் எனக்கும் பிரதிவாதிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு ரூ.86,000/?- கடன் கொடுத்ததாக சொல்லி உள்ளேன். அந்த பணம் எனக்கு எப்படி வந்தது என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு நான் கொடுத்ததாக சொல்லும் பணம் நான் கையில் வைத்திருந்த பணம் ஆகும்.

4.நான் பிரதிவாதிக்கு ஏற்கெனவே பணம் கொடுத்து வாங்கியதாக சொல்லி உள்ளேன் என்றும் அதற்காக கடன் கொடுப்பதற்காக எனக்கு மணி லெண்டிங் லைசென்ஸ் மற்றும் பான்புரோக்கர் லைசென்ஸ் உள்ளதா என்றால் இல்லை.

5. பிரதிவாதி என்னிடம் பணம் வாங்க வந்தபோது அவருடன் யாரும் வராமல் தனியாக வந்ததாக தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் பிரதிவாதி என்னிடம் பணம் வாங்க வரும்போது என்னுடன் யாரும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பணம் கொடுப்பதற்காக யாராவது சிபாரிசு செய்தார்களா என்றால் இல்லை நானாகதான் கொடுத்தேன்.

6. பிரதிவாதி என்ன வியாபாரம் செய்கிறார் என்றால் அவர் வியாபாரம் செய்வதாக சொல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என் கையெழுத்து தான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா அல்லது என் வழக்கறிஞருக்கு தெரியுமா என்றால் நான் சொல்லிதான் என் வழக்கறிஞர் தாக்கல் செய்தார்.

(சாட்சி பதில் அளித்ததை பதிவு செய்த சமயத்தில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் சாட்சி சாட்சியம் அளித்த விவரத்தை சாட்சியம் அளிக்கவில்லை என்று சொல்லி ஆட்சேபனை தெரிவித்ததால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)